

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஒன்றிய பகுதிகளில் ரூ.20 கோடியே 72 லட்சம் மதிப்பிலான 115 முடிவுற்ற திட்டப் பணிகளை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். உடன் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., மோனிகா ராணா, மணிமேகலை ராஜேந்திரன், அ.பா.ரகுபதி, மதிவாணன், சிறைச்செல்வன், வடிவேல் முருகன், நேருபாண்டியன், கலாநிதி, சரவணன் மற்றும் திரளான பொதுமக்கள், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக உசிலம்பட்டி தொகுதியில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் விமல் தலைமையில், ஒன்றிய செயலாளர் இ.ஜெயச்சந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர் சிவனாண்டி முன்னிலையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் கண்டன உரை ஆற்றிய போது எடுத்த படம். உடன் கழகப் பேச்சாளர்கள் ராஜகம்பீரம் அப்பாஸ், இளம் பேச்சாளர் சௌமியா, கழக நிர்வாகிகள் சரவணகுமார், எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன், சங்கர பாண்டி, செல்வ பிரகாஷ், ஜெயராமன், பழனி, முருகன், குபேந்திரன், சுரேஷ், ஜெகதீஷ், ஜெகநாதன், காளிதாஸ், ஆதவன், சாதிக், ராஜதுரை, விளையாட்டு அணி மாரிராஜா மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்

### திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாள் விழா!

## 1000 பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்!

திருவண்ணாமலை, மார்ச். 13-

திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில், தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது. விழாவில் கலந்து கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு நல உதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

15.03.2025 சனிக்கிழமை மாலை சரியாக 6.00 மணிக்கு திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை அருகில், திருவண்ணாமலை நகர திமுக சார்பில், கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் தலைமை வகிக்கிறார்.

மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, இல. குணசேகரன், ஆ.கண்ணன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கீம்.சேட் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நகர அவைத் தலைவர் சி.சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, 1000க்கும் மேற்பட்டோருக்கு நல உதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை,

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன்.எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், துணை செயலாளர்கள் பிரியா விஜய ரங்கன், விஜயலட்சுமிரமேஷ். மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந்தரராசன், செய்தித்தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, சு.விஜி(எ) விஜயராஜ், எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர். பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பால முரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார்காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி. து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி. சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த. செந்தில் குமார், அ.ஏழுமலை, த. மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பால சுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன்

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், பேரூராட்சி தலைவர்கள் கோ. சரவணன், கௌரிநடராஜ், செல்வபாரதிமனோஜ்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடி கள் கலந்துகொள்ள உள்ளனர்.

நிறைவாக நகர துணை செயலாளர் மு.கருணாமூர்த்தி நன்றி கூறுகிறார். முன்னதாக மாவட்ட தி.மு.க. அம்பேத்கர் கலைக் குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

---

### மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வரவேற்புரை!

# தென்காசி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை!

தென்காசி.மார்ச்.13-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலக கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் மரு.கலை கதிரவன் (தென்காசி) கணேஷ்குமார் ஆதித்தன் (ஆலங்குளம்) நௌஷாத் (கடையநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், மாவட்ட துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, பொருளாளர் ஷெரிப், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லதுரை,ஜேசு ராஜன்,ஷேக் தாவுது, முத்துப்பாண்டி, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் முகமது ரஹீம்,சமுத்திர பாண்டியன்,கதிர்வேல் முருகன், அருள்,ரவிச்சந்திரன், இராஜேஸ்வரன்,சாமிதுரை, ஒன்றிய செயலாளர்கள் செல்லத்துரை, அன்பழகன்,சிவன்பாண்டியன், சீனித்துரை, அழகு சுந்தரம்,திவான் ஒலி, சுரேஷ், ரவிசங்கர்,ஜெயக்குமார், மகேஷ் மாயவன்,மாரி வண்ணமுத்து, நகர செயலாளர்கள் அப்பாஸ்,வெங்கடேசன், கணேசன்,பேரூர் செயலாளர்கள் அழகேசன்,லட்சுமணன்,நெல்சன், ஜெகதீசன்,பண்டாரம், சுடலை, குட்டி என்ற சங்கர்,முத்தையா பாண்டியன், தங்கப்பா என்ற முகமது உசேன், வெள்ளத் துரை, சிதம்பரம்,முத்து, கோபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதால் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

---

### சாகித்ய அகாடமி விருது பெற்ற

# பேராசிரியர் விமலாவைச் சந்தித்து வாழ்த்து!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தெரிவித்தார்!

நெல்லை.மார்ச்.13-

சிறந்த மொழி பெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது பெற்ற பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் விமலாவை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழ் மொழிபெயர்ப்பில் மலையாள எழுத்தாளர் நளினிஜமிலா எழுதிய “எண்ட ஆண்கள் “என்ற மலையாள நூலை “எனது ஆண்கள்” என தமிழில் மொழிபெயர்த்த கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்தை சேர்ந்த, தற்போது பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றி வரும் விமலாவிற்கு 2024ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு தேர்வாகியுள்ளார். விருதுபெற்ற பேராசிரியை விமலாவிற்கு திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்கள்.

இந்நிலையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளரும் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்துல்வகாப் நேரடியாக சவேரியார் கல்லூரிக்கு சென்று பேராசிரியை விமலாவை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து நினைவுப் பரிசும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் அருட்திரு. காட்வின் ரூபஸ், தமிழ் துறை தலைவர் பேராசிரியர் இதயராஜா, கழக வழக்கறிஞர் ஏ.எல்.பி.தினேஷ், பொறியாளர் அணி சாய்பாபா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

# தலைமைக் கழக நிர்வாகிகள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **பூவை சி.ஜெரால்டு** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு இணைச் செயலாளராகவும்;**

தி.மு.க. மாணவர் அணி இணைச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **எஸ்.மோகன்** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **தி.மு.க. வர்த்தகர் அணி துணைத் தலைவராகவும்** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணித்தலைவராக பொறுப்புவகித்துவரும்வழக்கறிஞர் **இரா. ராஜீவ்காந்தி** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக மாணவர் அணிச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **திரு.சி.வி.எம்.பி.எழிலரசன்** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக கொள்கைப் பரப்புச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.கழகத்தின் சார்பில்

# ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோர்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.கழகத்தின் சார்பில் ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோருடன் கீழே குறிப்பிட்டுள்ள பேச்சாளர்களும் இணைந்து பங்கு பெறுவர்.

1. திரு. டி.எம். செல்வகணபதி எம்.பி.,
2. திரு. கே.என். அருண்நேரு, எம்.பி.,
3. திரு. தங்க தமிழ்செல்வன், எம்.பி.,
4. திருமதி. நாக நந்தினி
5. திரு. ராஜா தமிழ்மாறன்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



முதல்வர் கழக தலைவர் ஆணைக்கிணங்க பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கும் விழா. கழக தலைவரின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு கழக பொதுக்குழு உறுப்பினர் வைகை எம்.பரமன் தலைமையில் , மதுரை மாநகர மாவட்ட கழக செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ., வி.வேலுசாமி, பி. குழந்தைவேலு, ஆகியோர் முன்னிலையில் மதுரை ஆரப்பாளையத்தில் தண்ணீர் பந்தல் திறக்கப்பட்டது. உடன் மூவேந்திரன் , சின்னம்மாள், எஸ்.எஸ். மாறன், கிருஷ்ணபாண்டி, சுரேஷ், சீனி ரமேஷ், கஜேந்திரன் எம்.சி., துரைமணி, மக்கள் சேவகர் எஸ்.எம்.ஆர்.அருண் குமார், உதயகுமார் ,பாண்டி, பி.டி.ஆர்.கண்ணன் , தெய்வகுமார், தாத்தமாரி, கருப்பு , இந்திராஜித், கணேசன் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ”முத்தமிழ் அறிஞர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ஆணைப் பிறப்பித்ததை முன்னிட்டு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆலோசனைப்படி கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை பெற்றோர் ஆசிரியர் கழக தலைவரும் நல்லூர் வடக்கு ஒன்றியக் கழக துணை செயலாளருமான டி. அண்ணாதுரை வழங்கினார். அருகில் தலைமை ஆசிரியர் எஸ். ராமலிங்கம் மற்றும் ஆசிரியை, ஆசிரியர்கள், ஊராட்சி செயலர் எம். பானுப்பிரியா உள்ளனர்.